

**பத்திகளை வாசித்திடுக; சரியான கூற்றுகளுடன் இணைத்திடுக.**

கறிவேப்பிலை ஒரு வகை மூலிகையாகும். மணத்திற்காக மட்டும் உணவில் சேர்க்கப்படும் இலையாக இதனைக் கருதுதல் கூடாது. விஷக்கடி, சீதபேதி ஆகியவற்றைக் குணமாக்கவும் உணவில் சேரும் நச்சுத் தன்மையை முறிக்கவும் கறிவேப்பிலை துணைபுரிகிறது. ஆகவே, கறிவேப்பிலையைச் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் ஓர் இலை மட்டுமே என்று எண்ணாமல் சிறந்த மூலிகையெனத் தெளிந்து பயன்படுத்துவோம்.




LIVEWORKSHEETS

காடு மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் வாழுமிடமாக உள்ளது. ஆதிகால மனிதர்கள் இருப்பிடம் இல்லாமல் காடுகளில் இருந்தார்கள். ஆனால், காடுகளில் பயங்கரமான மிருகங்கள் தாக்கிவிடும் என்பதால் அவர்கள் மரத்தில் சிறிய வீடு கட்டி தம்மைத் தற்காத்துக் கொண்டனர். சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளும் மயில், குயில், நெருப்புக் கோழி, கழுகு போன்ற பறவைகளும் பூச்சியினங்களும் ஊர்வனவும் காடுகளை வசிப்பிடமாகக் கொண்டுள்ளன. ஆக, காடு பல்லாயிரக்கணக்கான உயிர்களின் வசந்த மாளிகை எனின் மிகையாகாது.




LIVEWORKSHEETS

தென்னையில் காய்க்கும் இளநீரானது உடலுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியதாகிறது. இஃது இனிப்புச் சுவை கொண்டிருக்கும். இதனை வெப்பக் காலத்தில் அருந்திவர உடலின் உஷ்ணம் தணிந்து குளிர்ச்சி உண்டாகும். இது காய்ச்சல், வெப்பக் கட்டிகள், அம்மை போன்ற நோய்களுக்கு நிவாரணமாகிறது. உடல் சூட்டைத் தணிக்க இளநீரே சிறந்ததென மருத்துவரும் கூறுவதுண்டு.




LIVEWORKSHEETS